# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 4 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் 30.05.2020 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.



இங்கு வருகை தந்திருக்கும் நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கம் !

## கல்வியின் சிறப்பு

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி.

"காலை எழுந்தவுடன் படிப்பு" என்றார் பாரதியார்.

சிறுவர்களாகிய நாம், படிப்பதற்கு இதுவே சிறந்த பராயம் என்பதை இவை கூறுகின்றன. இன்றைய உலகில் கல்வி என்பது அத்தியவசியமானதாகும். அது ஒருவனுக்கு வாழ்வில் பெருமையையும் புகழையும் நன்மதிப்பையும் தருவதாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்

நிற்க அதற்குத்தக"

கற்கும் போது ஐயமறக் கற்கவேண்டும். பின் அதன்படி வாழவேண்டும் என்றார் திருவள்ளுவர்.

கல்வி என்பது ஏட்டுப்படிப்பை மட்டுமன்றி அனுபவக்கல்வி, சமூகக்கல்வி, வாழ்க்கைப்பாடம் போன்றவற்றையும் குறிக்கும். மாணவர்களாகிய நாம் படித்தால் மட்டும் போதாது. பெற்ற அறிவை சூழ்நிலைக்கேற்றபடி பயன்படுத்தி நல்ல மனிதர்களாக வாழவேண்டும். கற்றகல்வியே ஒருவனுக்கு வளமான வாழ்க்கைக்கும் சமூகத்தில் நன்மதிப்பிற்கும் வித்திடும்.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனக்கூறி என் உரையை முடிக்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம் : ஆசிரியர் திரு. எல்விஸ் எமிலியானுஸ்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி.விஜயசுதா குகனேஸ்வரன்.